1992 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளை ஒதுக்குகின்ற நேரத்தில், 25 வீடுகளை ஒதுக்குகின்றார்கள். அரிஜனத் தெருவில் குலுக்கல் முறையில் 25 வீடுகளைக் கொடுத்து விட்டால், மீதி இருப்பவர்கள் அங்கே குடியேற முடியாது. எங்களுக்கும் கட்டிய பிறகுதான் அங்கே நீங்கள் செல்லவேண்டுமென்று ஊர்க்கட்டு செய்து, தகராறு செய்கின்ற காரணத்தினால், ஒவ்வொரு கிராமமாக கேட்கப்பட்டுள்ள வீடுகளைக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமாஎன்பதை அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிசீலனை செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 328. திரு. வி. பி. சந்திரசேகர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

328—

ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப் பட்ட குடிநீர்த் திட்டம்.

*3899—திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொள்ளாச்சி நகரம் வழியாக அம்பராம்பாளையம் ஆற்றிலிருந்து பொள்ளாச்சிக்கு அருகாமையில் அமைந்துள்ள கிராமப் பகுதிக்குச் செல்லும் ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் (E.E.C.) மூலம் செயல்படுத்தும் குடிநீர்த் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சி நகரம் வழியாக அம்பராம்பாளையம் ஆற்றிலிருந்து பொள்ளாச்சிக்கு அருகாமையில் அமைந்துள்ள கிராம பகுதிகளுக்குச் செல்லும் ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் (ஈ.ஈ.சி.) மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டம் நிறுத்தப்படவில்லை. பல்வேறு காரணங்களினால் திட்டப் பணிகள் மெதுவாக நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளையும் ஜூன் 1993-க்குள் முழுமையாக முடித்து திட்டத்தினை பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறப்பான திட்டம் புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்ட திட்டம். இது செயல்முறைப் படுத்தப்பட்டு அதற்குப் பின்னாலே வந்த தி.மு.க. மக்கள் விரோத ஆட்சி இந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக நகரப் பகுதிகளுக்கு அருகாமையில் இருக்கிற மக்கள் அனைவரும் பயன் பெறுகிற காரணத்தாலே இது சிறப்பான திட்டமாக இருக்கிற காரணத்தாலே இதை விரைவுபடுத்தி மக்களுக்கு உதவுகிற வகையில் இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகளை விரைவாக நடத்துவதற்கு பொறியாளர்களுக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொள்ளாச்சி தொகுதியானது புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா தி.மு. கழகம் கண்ட நேரத்திலிருந்து, அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் கோட்டையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் தொகுதியில் இருக்கிற மக்கள் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியையும், புரட்சித் தலைவி அவர்களையும் கற்பக விருட்சமாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மக்களுடைய எண்ணத்திற்கு ஏற்றாற்போல் இந்தக் குடிநீர்த் திட்டத்தை இந்த அரசு உடனே செயற்படுத்தி இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினை வருகிற 1993 ஆம் ஆண்டிற்குள் முழுமையாக முடிப்பதற்கு பல்வேறு திட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டு நிறைவேற்றுவதற்கு ஆணைகள் இடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின்படி நடைபெறுகிற இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டமானது எனது தொகுதியான கிணத்துக் கடவு தொகுதிக்கும் அதோடு உட்பட்ட 70க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கும் உள்ளடக்கி இருக்கிறது என்று பொறியாளர் மூலமாக அறிந்திருக்கிறேன். அதன்படி இந்தத் திட்டம் மூலம் கிணத்துக்கடவு தொகுதியில் எல்லா கிராமங்களையும் உள்ளடக்கி குடிநீர் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 24]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 329. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

329—

இராமநாதபுரம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை

*1660—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :

தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு 6 நவீன அரிசி ஆலைகள் அமைப்பதற்காக அரசு உத்திரவு இட்டது. அதற் காக இராமநாதபுரம் மற்றும் திருவாடனை தொகுதியில் திருவேகம்புதூர் என்ற இடத்தில் இடம் எல்லாம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அங்கே கட்டுவதற்கான ஆய்வுப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் கடந்த தி.மு. கழக ஆட்சியில் அது எதிர்க்கட்சி தொகுதி என்ற ஒரே காரணத்திற்காக அங்கே தண்ணீர் வசதி இல்லை என்று சொல்லி அந்தத் திட்டத்தைக் கைவிட்டது. அந்தத் திட்டம் பிறகு பரமக்குடியில் கட்டுவதற் காக மாற்றப்பட்டது. ஆனால் பரமக்குடியும் எதிர்க்கட்சி தொகுதி என்ற காரணத்தால் அங்கேயும் தி.மு.க. அரசால் இந்தத் திட்டம் கை விடப்பட்டது. வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூட அதற்காக சிபாரிசு செய்தார்கள். கிட்டத்தட்ட 200 பேருக்கு மேல் படிப்பு அறிவு இல்லாத தாழ்த்தப்பட்ட குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்களை வேலையில் அமர்த்தும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.